காய்கறி ஆகியவை முக்கிய உணவின் ஒரு பகுதியாகப் பரிமாறப்படலாம். துணை உணவு என்பது, இனிப்பு வகையாக அல்லது கார வகையாக இருக்க வேண்டும். இதில் முக்கியமாக காய்கறிகள், பழங்கள் அல்லது முட்டைகள் அடங்கும். துணை உணவு வகையில் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு எதும் இருக்கக்கூடாது. ஆயினும், மேற் குறிப்பிட்ட இரண்டு வகை உணவுடன் கீழ்க்காணும் உணவு வகைகளும் பரிமாறப்படலாம். அவையாவன :—சூப் அல்லது ரசம். பிஸ்கட்டுகள், முந்திரிப்பருப்பு, பழப்பாகு, குளிர்பதனப் பெட்டியில் வைக்கப்பட்ட பழங்கள் உட்பட ஏனைய பழங்கள் அல்லது பழச்சாறு அல்லது காய்கறி சூப், பஜ்ஜி, பப்படம், சட்னி, ஊறுகாய், ரெய்தா, பதனப்பழச்சாறு (preserve) வெங்காயம், கீரை, நெய், வெண்ணெய், பாலேடு, தயிர், பாலாடைக்கட்டி, மோர், குழம்பு, முட்டையும் பாலும் சேர்ந்த ஒருவகை தின்பண்டம் (custord) சுவையூட்டும் கூட்டு, ஏனைய மசாலாப் பொருட்கள்.

3. உணவகம் ஒன்றில் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் அல்லது அயல்நாட்டுத் தூதுவர்கள் அல்லது அயல்நாட்டு அரசுத் தூதுக் குழுக்கள் அளிக்கும் விருந்துகளுக்கும் அனைத்துநாட்டு மாநாடுகள் சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்படும் விருந்துகளுக்கும் இவ்வாணையின் விதித்துறைகளிலிருந்து அரசு விலக்களிக்கலாம்.

நாடு முழுவதும் தற்போதுள்ள உணவுப் பற்றுக்குறை காரணமாக, உணவகங்களில் உணவுகள் தயாரித்து வழங்கப்படுகையில் ஊதாரித்தனத்தைத் தவிர்த்து சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் நோக்கத்துடன் இந்தக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

4. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்கீழ், 974-75-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.